**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

23.10.2025

O.S. No. 276/2022

D.W. 1 திரு. ஆனந்த்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்) -**

நான் ஏற்கனவே சாட்சியம் அளிக்கும்போது சொல்லியிருந்து ரெஜிஸ்தர் எண்கள். 1 லிருந்து 15 என்பது G.O. Ms. No. 2390 Home (Religious endowments) Department, dated: 16.08.1960 ன்படி பாரமரிக்கப்படும் பதிவேடுகள்தான் என்றால் சரிதான். அதில் பதிவேடு எண். 13 என்பது Register of Documents and Title Deeds என்றால் சரிதான். பதிவேடு எண். 13 ல் குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் சொல்லும் இந்த வழக்கு சொத்து குறித்தான ஆவணங்கள் எங்களிடம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். தாவா சொத்து சம்பந்தமான அவ்வாறு பதிவேடு எண். 13 ல் குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் சொல்லும் ஆவணங்கள் என்ன என்று சொல்ல முடியுமா என்றால் அதற்கான வருவாய் ஆவணங்கள் உள்ளது. வருவாய் ஆவணங்கள் தவிர வேறு எந்த ஆவணமும் கிடையாதா என்றால் கிடையாது. அந்த ஆவணங்களை வைத்துதான் இந்த வழக்கில் நாங்கள் வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் என கோருகிறோம் என்றால் சரிதான். 1960 க்கு முன்னர் உள்ள வழக்கு சொத்து குறித்தான பதிவேடுகள்

எதுவும் உள்ளதா என்றால் தற்போது எனக்கு தெரியாது, பார்த்துதான் சொல்ல முடியும். தற்போது உள்ள பதிவேடுகள் எதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்கள் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளது. ஆவணங்கள் அடிப்படையில் அவ்வாறு சொல்கிறேன். அந்த பதிவேடுகள் எந்த முன் ஆவணங்களின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் அந்த பதிவேடுகளில் Old Settlement Register ன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டதாக குறிப்பு உள்ளது. மேற்சொன்ன அரசாணையின் படி பதிவேடு 7 Leases and Licenses குறித்தான பதிவேடு என்றால் சரிதான். குத்தகைக்கு கொடுக்கும் சொத்துக்கள் குறித்து பராமரிக்கப்படும் பதிவேடு அது. அந்த பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். அதில் எந்த ஆண்டிலிருந்து தாவா சொத்தில் உள்ள கட்டிடங்கள் குத்தகைக்கோ, உரிமத்திற்கோ கொடுக்கப்பட்டது என்ற விவரம் குறிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அது வாய்மொழியாக கொடுக்கப்பட்டதால் குறிக்கப்படவில்லை. சோனாச்சலம் என்பவர் எங்கள் கோவிலில் ஸ்ரீகாரியமாக வேலை பார்த்தாரா என்றால் இல்லை, Manager ஆக வேலை பார்த்துள்ளார். சோனாச்சலம் எங்கள் நிர்வாகத்தில் எப்போது வேலைக்கு சேர்ந்தார் என்று சொல்ல முடியுமா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. சோனாச்சலம் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். எப்போது பணி ஓய்வு பெற்றார் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அவர் தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். சோனாச்சலம் என்பவர் M.P. 2/2012 ல் எங்கள் தரப்பில் சாட்சியம் அளித்துள்ளார்

என்றால் சரிதான். எந்த ஆண்டு அவ்வாறு சாட்சியம் அளித்துள்ளார் என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும். பி.வா.சா.ஆ. 8, 29.03.2022 தேதியிட்ட M.P. No. 2/2012 ல் ஏற்பட்ட உத்தரவில் 6 வது பக்கத்தில் மனு திருக்கோவில் ஸ்ரீகாரியம் சோனாச்சலம் என்பவர் மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக விசாரிக்கப்பட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர் Manager ஆகதான் இருந்தார். பொதுவாக குறிப்பிடுவதுபோல ஸ்ரீகாரியம் என குறிப்பிட்டுள்ளார்கள். கன்னியாகுமரி பகவதியம்மன் கோவில் பெரிய கோவிலா, சின்ன கோவிலா என்றால் பெரிய கோவில்தான், ஆனால் பேச்சு வழக்கில் எல்லா கோவில் நிர்வாகிகளையும் ஸ்ரீகாரியம் என குறிப்பிடுவார்கள். அதுபோல அந்த உத்தரவிலும் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த பணிக்குறித்தான ஆவணங்களான நியமன உத்தரவு, மாறுதல் உத்தரவு ஆகியவற்றில் ஸ்ரீகாரியம் என்றுதான் இருக்கும் என்றால் சரியல்ல, மேலாளர் என்று இருக்கும். அந்த ஆவணங்களை ஆஜர்படுத்த முடியுமா என்றால் ஆஜர்படுத்த முடியும். ஸ்ரீகாரியமோ, மேனேஜரோ அவர்களை நியமிக்கும் அதிகாரி இணை ஆணையாளர் / செயல் அலுவலர் என்றால் சரிதான். இந்த வழக்கில் 3 ஆம் பிரதிவாதியாக இணை ஆணையாளர் / செயல் அலுவலராக காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அறங்காவலர்களின் தீர்மானம் இல்லாமல் கோவில் சொத்தை குத்தகைக்கோ, உரிமத்திற்கோ கொடுக்க முடியுமா என்றால் அறங்காவலர் இல்லாத நிலையில் மேலாளரே வாய்மொழியாக கொடுத்துள்ளார். அறங்காவலர் இல்லாத நிலையில் 3 ஆம் பிரதிவாதி அறங்காவலர் நிலையில் இருந்து தீர்மானம் நிறைவேற்றிதான் கோவில் சொத்தை குத்தகைக்கோ, உரிமத்திற்கோ

கொடுக்க முடியும் என்றால் சரிதான். அதுபோல வெங்கடாச்சல ஐயருக்கு தாவா சொத்தை வாய்மொழியாக கொடுப்பதற்கு தீர்மானம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. திருவிதாங்கூர் ராஜியத்தில் Cadastal சர்வே நடந்தது 1082 ME நடந்தது என்றாலும் அதில்தான் அந்த ராஜியத்தில் இருந்த சொத்துக்களுக்கு சர்வே எண் கொடுக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவ்வாறு சர்வே எண்கள் கொடுப்பதற்கு முன்பாக லெக்கம் என குறிப்பிடுவார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அது தொடர்பான வருவாய் ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான்.

மதிய உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை தொடர்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டு, மதிய உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்) :-</u>**

எங்கள் கோவிலில் ஊட்டுப்புரை நிறுத்தப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. சம்பளமாக கட்டுச்சோறு கொடுத்த வழக்கம் எப்போது நிறுத்தப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அவ்வாறு கட்டுச்சோறு வழக்கம் நிறுத்தப்பட்ட பிறகு அந்த இடம் வெறுமனே வேறு உபயோகம் இல்லாமல் இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் 4 வது பத்தியில் 1117 M.E. / 1942 ல் ஊட்டுப்புரை நிறுத்தப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு அந்த இடம் உபயோகபடுத்தாமல் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெங்கடாச்சல ஐயருக்கு வாய்மொழியாக

கொடுத்ததாக சொல்லும் தேதி வரையில் அந்த இடம் தானிய களஞ்சியமாக இருந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பு சான்றாவணம் 8 ல் வா.சா.ஆ. 1, 2 மற்றும் 3 ஆவணங்கள் மட்டும்தான் சான்றிட்ட நகல்கள் என்றும் மற்ற அந்த மனுவில் இந்த வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மற்ற ஆவணங்கள் அசல் ஆவணங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் 8 மற்றும் 9 ஆகியவை நகல் என குறிப்பிடப்பட்டுள்ளது, மற்ற ஆவணங்கள் பொறுத்த வரையில் அசல் அல்லது நகல் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டள்ள ஆவணங்கள் பி.வா.சா.ஆ. 8 உத்தரவில் நகல் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.த.சா.ஆ. 8 மற்றும் 9 ஆக பி.வா.சா.ஆ. 8 உத்தரவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தவிர, மற்ற எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் அசல் ஆவணங்கள் என்றாலும் அவற்றை இந்த நீதிமன்றத்தின் I.A. 3/2023 உத்தரவுபடி தாக்கல் செய்யாமல் நகல்களை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. M.P.2/2012 ல் ஏற்பட்ட பி.வா.சா.ஆ. 8 உத்தரவிற்கு எதிராக இந்த வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு ஆணையர் முன்பு R.P. 26/2022 ஆக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டில் எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல, அந்த மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. வா.சா.ஆ. 31 வில்லங்க சான்றிதழ் O.S. 537/2002 ல் வா.சா.ஆ. 10 ஆக இந்த வாதியால் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. ஆவணங்களை பார்த்தால்தான் சொல்ல முடியும். வா.சா.ஆ. 23 O.S. 537/2002

தீர்ப்புரையில், தீர்ப்புரையை பார்த்து சொல்ல சொன்ன போது அந்த ஆவணம் அவ்வாறு அந்த வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ. 31 ஆவணம் M.P. 2/2012 லும் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் 8 ஆக இந்த வாதி குறியீடு செய்துள்ளார் என்றால் சாட்சி பி.வா.சா.ஆ. 8 உத்தரவை பார்த்துவிட்டு அந்த உத்தரவில் அந்த ஆவணத்தை குறிப்பிட்டு எந்த எண்களும் இல்லை என கூறுகிறார். இந்த ஆவணங்கள் 2 ஆம் பிரதிவாதியால் இந்த நீதிமன்றத்தில் இடப்பட்ட உத்தரவின் அடிப்படையில் M.P. 2/2012 ல் இந்த வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் என தாக்கல் செய்யப்பட்டவை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. O.S. 537/2002 மற்றும் M.P. 2/2012 வழக்குகள் இந்த நீதிமன்றத்தில் 2 ஆம் பிரதிவாதியால் தாக்கல் வாதியின் மனுவின்பேரில் தாக்கல் செய்யப்பட்ட எங்களால் நடத்தப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் என்னால் சொல்ல முடியும். M.P. 2/2012 உத்தரவை படித்தேனா என்றால் படித்தேன். 06.07.1981 தேதியிட்ட விற்பனை ஆவணம் சார் பதிவாளர் பட்டம், திருவனந்தபுரம் ரெஜிஸ்டேரசன் டிஸ்டிரிக்கில் பதிவு செய்யப்பட்டு சார் பதிவாளர் கொட்டாரம் பதிவேடுகளில் குறிப்பாணையின் மூலம் பதிவு செய்யப்பட்டு, அந்த விவரமும் வா.சா.ஆ. 31 வில்லங்க சான்றிதழில் 1 வது வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் கொட்டாரம் சார் பதிவாளர் அலுவலகத்திலும், அந்த ஆவணத்தின் நகல் பெற முடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் அது எனக்கு தெரியாது. O.S. 537/2002 வழக்கு பிராதில் பத்தி 7 ல் வெங்கடாச்சலம் ஐயர் வழக்கு

சொத்தில் பேலஸ் லாட்ஜ் நடத்தி வந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு லாட்ஜ் எதுவும் நடத்தவில்லை. கோவில் பதிவேடுகளில் தாவா சொத்து என்ன சர்வே எண்ணாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 678/41 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. அது ரீசர்வே எண் என்றாலும் ரீசர்வே 1970 களில் தான் முடிவு பெற்று ரீசர்வே எண்கள் கொடுக்கப்பட்டது என்றாலும் அதனால் அந்த பதிவேட்டில் கூறப்பட்டுள்ளதாக நான் சொல்லும் விவரம் அதற்கு பிறகு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அந்த ரீசர்வே எண். 678/41 க்கு தொடர்பான பழைய சர்வே எண்கள் மூன்று சர்வே எண்கள் என்றால் சரியல்ல. 1/31 க்கு தொடர்பான ரீசர்வே எண். 678/41. அந்த சொத்துதான் தாவா சொத்து. 1/11, 122 ஆகியவை ரீசர்வே எண். 678/41 ல் அடங்கவில்லையா என்றால் சாட்சி தற்போது அந்த ரீசர்வே எண் அந்த மூன்று சர்வே எண்களையும் சேர்த்ததுதான் என்று கூறுகிறார். திருவிதாங்கூர் சமஸ்தான செற்றில்மென்ட் ரெஜிஸ்தர்படி சர்வே எண்.1/1, 8 ஏக்கர் 17 சென்ட் நிலம் என்றால் சரிதான். தாவா சொத்தில் கோவில் உள்ளதா என்றால் இருக்கிறது. பகவதியம்மன் கோவில் இருக்கும் நிலம் சர்வே எண். 679/1 ல் அமைந்துள்ளது. அவ்வாறு கோவில் இருக்கும் நிலத்திற்கு தனி சர்வே எண்ணும், தாவா சொத்து இருக்கும் நிலத்திற்கு தனி சர்வே எண்ணும் கொடுத்த சமயத்தில் நடந்த விசாரணையில் கோவில் நிர்வாகம் கலந்து கொண்டதா என்றால் அது எனக்கு தற்போது தெரியாது, கேட்டுதான் சொல்ல முடியும். அதன்பிறகு தாவா சொத்துக்கு தனி சர்வே எண்ணும், கோவில் இருக்கும் இடத்திற்கு தனி சர்வே எண்ணும் கொடுத்திருப்பதை ஆட்சேபித்து ஒரே சர்வே எண் கொடுக்க வேண்டும்

என மனு எதுவும் கொடுத்தோமா என்றால் கோவில் பெயரில் பட்டா இருந்ததால் நாங்கள் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. வழக்கு சொத்திற்கு பகவதியம்மன் கோவில் பெயரில் ரீசர்வேக்கு பிறகு பட்டா இருப்பதாக எதாவது ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். என்ன ஆவணங்கள் உள்ளது என்றால் SLR நகல், A பதிவேடு, நிலவரி திட்ட பதிவேட்டின் நகல் உள்ளது. வா.சா.ஆ. 27 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள A பதிவேட்டில் பட்டாதாரர் பெயர் என்று ஒரு காளம் உள்ளது என்றால் சரிதான். அதில் பகவதியம்மன் கோவில் என பட்டாதாரர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. Remarks காளத்தில் கன்னியாகுமரி பகவதியம்மன் கோவில் என்று போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. காளம் 4 மற்றும் 5 ல் அரசு புறம்போக்கு என தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மகராஜாக்கள் காலத்தில் கோவில்கள் அரசின் நேரடி கட்டுப்பாட்டில் இருந்ததால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. எதை வைத்து அவ்வாறு கூறுகிறேன் என்றால் அரசு அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலிருந்து வரும் கடிதங்களிலும், உத்தரவுகளிலும் கோவில் நிலம் அரசு புறம்போக்கு என்றுதான் குறிப்பிடப்படுகிறது, அதை வைத்து கூறுகிறேன். தமிழ்நாடு இந்து அறநிலையத்துறை சட்டம் 1959 பிரிவு 97D ல் குறிப்பிடப்பட்டுள்ள தேவஸ்துவம் வகை அல்லது தேவஸ்துவம் புறம்போக்கு மற்றும் இதர பண்டார வகை நிலங்கள் 12.04.1922 க்கு பிறகு தேவஸ்துவம் நிலங்களாக கருதப்பட்டு அவற்றிற்கு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905 அரசு நிலங்களை போலவே கருதப்பட்டு அதற்கு பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்து

ரெவன்யூ புறம்போக்காகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அது பண்டார வகை கிடையாது என்றாலும் அதனால் அது கோவில் சொத்து என கூறமுடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 28 ல் எத்தனை பக்கங்கள் உள்ளது என்றால் அச்சு பகுதி 10 பக்கம் உள்ளது. பி.வா.சா.ஆ. 15 ல் எத்தனை பக்கங்கள் உள்ளது என்றால் 7 பக்கம் உள்ளது. வா.சா.ஆ. 28 ஆவணத்தில் சர்வே எண். 1/17 என்பதற்கு இனம் சர்க்கார் கன்னியாகுமரி தேவசம் பாட்டம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் அந்த ஆவணத்தில் சர்வே எண். 1/22 க்கு இனம் கன்னியாகுமரி தேவசம் பாட்டம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் அந்த கால கட்டத்திலேயே ரெவன்யூ புறம்போக்கு தனியாகவும், கோவில் நிலங்கள் தனியாகவும் வருவாய் ஆவணங்களில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஆவணங்களை பார்த்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 2 மற்றும் 3 ஆவணங்களை நாங்கள் எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது O.S. 152/2004 மற்றும் O.S. 394/2012 ல் தாக்கல் செய்யப்பட்ட பிராது. அது எதற்கு தாக்கல் செய்துள்ளோம் என்று தெரியாது. R.P. 26/2002 ல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. ஆவணங்களை பார்த்துதான் சொல்ல முடியும்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.